Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | STC 186/2020 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | வெள்ளைசாமி |
| Father's Name | -- | ஜெயராஜ் |
| Village | -- | வால்பாறை |
| Taluk | -- | வால்பாறை |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | இந்து |
| Age | -- | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 03rd February 2023.

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது**

**(எதிரி இன்று ஆஜரில்லை. எதிரியால் கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை :**

நான் வால்பாறை சிறுவர் பூங்காவில் வசித்து கறிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 23.02.2020 அன்று காலை 06.30 மணிக்கு எனக்கும் பக்கத்து கடைக்காரர் ஆன செந்தில்குமார் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது. அது பற்றி காலை 07.00 மணிக்கு

வால்பாறை காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றேன். அப்போது காவல் உதவி ஆய்வாளர் உதயசூரியன் (அ.சா.1) எங்களை விசாரித்து கொண்டிருந்தார். பிறகு தான் அழைப்பு கொடுக்கும்போது காவல்நிலையம் வரவேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

அதன் பிறகு அன்றே காலை 11.30 மணியளவில் விசாரணைக்காக அ.சா.1 என்னை அழைத்தார். அ.சா.1 தனது நாற்காலியில் அமர்ந்திருந்தார். அப்போது எதிரி பிரபு, செந்தில்குமார் மற்றும் செந்தில்குமாரின் மனைவி ராணி ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள்.

என்னை பார்த்தவுடன் எதிரி பிரபு கோபமடைந்துவிட்டார். உடனே எதிரி பிரபு அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியும், யார் கேஸ் கொடுத்தாலும் எடுத்திடுவியா என்று பேசிவிட்டு வராண்டாவிற்கு வந்துவிட்டார். அதன் பிறகு அ.சா.1 என்னையா பேசினார் என்று பிரபு பின்னால் சென்றார்.

அதன் பிறகு எதிரி பிரபு வாடா நீ வெளியே வருவதற்காக தான் காத்திருந்தேன். உன்னை யூனிபார்ம்மில் போட்டுவிடுகிறேன் என்றும், ஓங்கி அ.சா.1 வலது தோள்பட்டையில் குத்தினார். நிலை தடுமாறி அ.சா.1 கீழே விழுந்துவிட்டார். எதிரி அ.சா.1 ன் வயிற்றின் மீது தனது வலது காலை தூக்கி வைத்தார்.

உடனே காவல்நிலையத்தில் இருந்த அனைத்து போலிசாரும் தடுத்துவிட்டார்கள். எதிரி பிரபு, செந்தில் குமார், அவரது மனைவி ஆகியோர்கள் ஓடிவிட்டார்கள். பின்னாலேயே போலிசார் துரத்தி சென்றார்கள் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

**(எதிரியினை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

District Munsif cum Judicial Magistrate, Valparai

(ஒப்பம்)திரு.M.A.சுவேதாரண்யன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.